**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.25/2024** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 13** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | சுமதி | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **26.09.2025**

**1 முதல் 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது புதுக்கோட்டைமாவட்டம் திருமயம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல்ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 03.04.2021ம் தேதி பெரம்பலூர் மாவட்ட மங்கலமேடு வட்ட காவல்ஆய்வாளராக பணிபுரிந்தபோது மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அவர்களின் C.No.C2/2099/2021 Dated. 30.03.2021ன் படி வி.களத்தூர் காவல் நிலைய குற்ற எண்.67/2017 சட்டப்பிரிவுகள் 147, 294(b), 323, 506(i), 148 இதச வழக்கை நான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 06.04.2021 முதல் சட்டமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பு பணியில் இருந்தேன். அது முடிந்து 10.04.2021 முதல் 14.04.2021 ம் தேதி வரை நீதிமன்றம் தொடர் விடுமுறை என்பதால் 15.04.2021ம் தேதி கனம் குற்றவியல் நீதிமன்றம் வேப்பந்தட்டைஅவர்களிடம் என்னுடைய வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 16.04.2021 ம் தேதி சம்பவஇடம் சென்று சம்பவ இடத்தில் சாட்சி 1, 2 ஆகியோரை விசாரணை செய்து மேலும், ஏற்கனவே புலன்விசாரணை செய்த

அதிகாரி தயாரித்த மாதிரிவரைபடம், மற்றும் பார்வை மகசர் சரியாக இருந்ததால் நான் புதிதாக அவற்றை தயார் செய்யவில்லை. 17.04.2021 ம் தேதி இவ்வழக்கின் உண்மைதன்மை அறிவதற்காக சாட்சி 1க்கு 164 குவிமுச ன் படி வாக்குமூலம் பெற்று பதிவு செய்திட கனம் குற்றவியல் நீதிமன்றம் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பிவைத்தேன். அதன்பின்னர் வழக்கு மேற்விசாரணை ஆய்வாளர் நடராஜன் அவரிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா.1 உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியாது. சாட்சிகள் நல்லத்தம்பி, அழகுவேல் ஆகியோரை 16.04.2021 ம் தேதி விசாரித்து மறுவாக்குமூலம் பதிவுசெய்தேன். எனக்கு பின்பு ஆய்வாளர் நடராஜன் மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தாரா என்று எனக்கு தெரியாது. சுரேஷ் என்பவர் பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை அடிப்படையில் நான் புலன்விசாரணை மேற்கொண்டேன். உயர்நீதிமன்ற ஆணைப்படி மேற்கொண்டேன். அ.சா.1 ன் வாக்குமூலத்தை நீதித்துறை நடுவர் பதிவுசெய்தார். அந்த வாக்குமூலம் Chamberலில் பதிவுசெய்யப்பட்டதா அல்லது திறந்த நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டதா என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த வாக்குமூலத்தில் அரசு மருத்துவமனையில் கொடுத்த வாக்குமூலம் என்னுடையது இல்லை மற்றும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். சுரேஷ் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது யார் ஆய்வாளராக இருந்தார் என்று எனக்கு தெரியவில்லை. குவிமுச 164ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்ய நான் தான் நடவடிக்கை எடுத்தேன். தவறுதலாக முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளதாக சார்பு ஆய்வாளர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. எனது விசாரணையின் போது அ.சா.1 1வது எதிரிக்கும் தனக்கும் இடையே சிவில் வழக்கு இருப்பதாக கூறியுள்ளார். இதே வழக்கு சம்பவம் குறித்து 1வது எதிரியின் மனைவி ராமநத்தம்

காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்து அதற்கு CSR ரசீது வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சாட்சிகளின் வாக்குமூலத்தை என்னுடைய லேப்டாப்பில் விசாரித்த இடத்தில் வைத்து பதிவு செய்தேன். FIR அடிப்படையில் அ.சா.1, 2 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த வாக்குமூலம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.